Registered as a Newspaper

Time Reader
12/15AM
12/40AM
12.40AM
Staff Date-Time

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (01-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 311

# யாழ். பேரணி குறித்து கொழும்பில் தூதர்கள் சந்திப்பில் ஆராயப்படும்

## சர்வதேச அமைப்புகளுக்கும் விவரம்

கொழும்பு, ஒக்டோபர் 1

நேற்று முன்தினம் யாழ். நகரில் நடைபெற்ற — அரசுக்கு எதிரான — வரலாறு காணாத — கண்டனப்பேரணி தொடர்பான தகவல்கள், கொழும்பில் வாராந்தம் நடைபெறும் வெளிநாட்டுத் தூதர்களின் சந்திப்பின் போது வெளியிடப்படவிருப்பதாக அறியவருகின்றது.

இப்பேரணி தொடர்பான விவரங்களை கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் சந்திப்பின் போது அகதிகளுக்கான ஐ.நா. தூதரக வட்டாரங்கள் முன்வைக்கும் என்று தெரியவருகிறது.

பேரினவாத ஸ்ரீலங்கா அரசின் இனப்படுகொலைகளையும், நாகர்கோயில் மகா வித்தியாலய மாணவர் மீதான விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலையும் கண்டித்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பேரணி பற்றிய தகவல்களை சர்வதேச அமைப்புகளும், மனித உரிமை நிறுவனங்களும் கவனமாகத் திரட்டி வருவதாகவும் அறிய வந்தது.

இப்பேரணியை மக்கள் நடத்தியதற்கான காரணம், பங்குபற்றிய மக்கள் என்

[7 ஆம் பக்கம் பார்க்க]

## ஐ. நாவில் இன்று கதிர்காமர் உரையாற்றுவார்

நியூயோர்க், ஒக். 1

அமெரிக்காவில் விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

அமைச்சர் கதிர்காமர் நியுயோர்க்கில் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் துணைச் செயலாளருடன் பேச்சு நடத்தியுள்ளார். அத்துடன் அல்ஜீரியா, கொலம்பியா, சீனா, ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுடனும் அவர் பேச்சு நடத்தினார். (ஐ-4)

## இசை நிகழ்வுடன் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

நல்லூர் மற்றும் யாழ். வட்டம், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் தமிழீழ இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பிரபல பாடகர்களான எஸ். ஜி சாந்தன், சிட்டு, சுகுமார், தியாகராஜா, சுமேந்திரன் மற்றும் பல பாடகர்கள் பங்குபற்றுவர்.

# 3 ஆம் கட்ட ஈழப்போரில் இதுவரை ஆயிரத்து 374 படையினர் பலி!

## 14 படைமுகாம்கள் நிர்மூலம்!!

யாழ்ப்பாணம், ஒக். 1

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் நேற்று முன்தினம் வரையான 165 நாட்களில் முப்படைகளையும் சேர்ந்த ஆயிரத்து 374 பேரை சிறிலங்கா அரசு இழந்துள்ளது.

இவற்றில் ஆயிரத்து 306 படையினர் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். எஞ்சிய 68 படையினர் ''அன்ரனோவ்'' படை விமானம் கடலில் வீழ்ந்து மூழ்கிய சம்பவத்தில் பலியாகினர்.

இக் காலப்பகுதியில் இரு அவ்ரோ விமானங்களும், புக்காரா விமானம் ஒன்றும் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இரு ஹெலிக் கொப்டர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதப்படுத்தப்பட்டன.

குறாப் கப்டன் ஒருவர் உட்பட அனுபவம் வாய்ந்த எட்டு விமானிகளை விமானப் படை இக்காலப் பகுதியில் இழந்துள்ளது. இவர்களுடன் ''அன்ரனோவ்'' விமானம் கடலில் வீழ்ந்து மூழ்கியதில் இரு விமானிகள் உயிரிழந்தனர்.

திருமலையில்

''ரணசுறு'', ''சூரயா'' ஆகிய இரு சீன பீரங்கி கப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## மர்மப் பொருள் வெடித்து இளைஞர் காயம்

குமிழ் குமிழ் உள்ள ''டப்பி'' போன்ற பொருளை எடுத்து திறக்கமுற்பட்டவேளை அது வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

பூநகரி கறுக்காய் தீவுப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பூநகரி பத்தினிப்பாய் என்ற இடத்தைச் சேர்ந்த ஸ்ரீஸ்காந்தராசா குகதர்சன் 17 (வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இரு கைவிரல்களும் சிதறுண்ட நிலையில், காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## கொழும்பில் ஐவர் கைது!

கொழும்பு, ஒக். 01

ஜனாதிபதியையும் மற்றும் முக்கியஸ்தர்களையும் கொலை செய்யும் நோக்குடன் கொழும்பு வந்ததாகக் கூறப்படும் விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் எனக் குறப்படும் ஐவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக ''திவயின'' செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் முஸ்லிம் இளைஞர்கள் போன்று வேடம் தாங்கி இருந்தனர் என்று கூறப்பட்டது. (ஐ-3-6)

## வீடு பார்க்க சென்றவர் மீது படையினர் சூடு!

வீடுபார்க்கச் சென்றவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

குப்பிளானில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஆண்டி காந்தலிங்கம் [வயது 32] என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

## பத்துவயதுச் சிறுமியின் பரிவும் பரிதாபமும்...

### கண் கலங்க வைத்த காட்சி

வடமராட்சி, ஒக். 1

''அம்மா வருவா; அழாதையுங்கோடா''—பத்து வயதுச்சிறுமி சுசிலா தனது இரண்டு வயதுச் சகோதரிக்குக் கூறும் தேற்றுதல் மொழிகள் இவை.

இராணுவம் ஏவிய ஆட்லறி ஷெல் வீச்சில் காயமடைந்த இரண்டு வயதுக் குழந்தை சசிகலா காயத்தின் வேதனையால் "அம்மா, அம்மா!'' என்று வீரிட்டு அழுது கொண்டிருக்கிறது.

வளர்ந்த ஒரு பெண்ணின் பரிவுடன் தமது சகோதரியை இடுப்பில் வைத்து, முதுகில் தட்டிக் கொடுத்து அம்மா வருவார் என்று பொய் சொல்லித் தேற்றும் காட்சி ஆஸ்பத்திரிக்கு வந்த எல்லோரையும் கண்ணீர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடமாட்டம் தமிழகத்தில் இல்லை!

### வோல்டர் தேவாரம் அறிவிப்பு

சென்னை, ஒக். 1

தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இல்லை என்று தமிழக மேலதிக பொலீஸ் பணிப்பாளர் நாயகம் வோல்டர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாக தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலர் தெரிவித்து வரும் இவ்வேளையில் வோல்டர் தேவாரம் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இதே வேளை —

வேலூர் சிறையில் இருந்து தப்பிச்சென்ற 43 விடுதலைப் புலிகளில் 21 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலீஸ் அதிகாரிகளை மேற்கோள் காட்டி ''இந்து'' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ-4)

## நாட்டின் வருமானத்தில் 33.9 வீதம் யுத்தத்துக்கு!

### ஒதுக்குவதற்கு அரசு முடிவு

வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு செலவிட நாட்டின் மொத்த வருமானத்தில் 33.9 சதவீத நிதியை ஒதுக்கவிருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

இவ்வருடம் யுத்த செலவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 554 மில்லியன் ரூபா அடுத்த வரு

[7 ஆம் பக்கம் பார்க்க]

# சட்டவிரோதமாக முகாம்களில் சுமார் 600 பேர் தடுத்துவைப்பு!

## மனித உரிமைகள் செயலணி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 1

சட்டத்துக்கு முரணான முறையில் சுமார் 600 பேர் இராணுவ மற்றும் பொலீஸ் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [illegible] உரிமைகள் செயலணி இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த செயலணி விசாரணைகளை நடத்தி வருகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் என்று செயலணியின் தலைவர் சி. ரீ ஜான்ஸ் தெரிவித்துள்ளார். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. பயிராக்கவியல் / மிருக விஞ்ஞானம் / விவசாயப்பொருளியல் / விவசாயப் பொறியியல் / விவசாய இரசாயனவியல் / விவசாய உயிரியலில் பேராசிரியர்
2. விவசாய உயிரியல் / மிருக விஞ்ஞானம் / விவசாய இரசாயனவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 30 - 11 - 1995 ஆகும்.
ஏனைய பதவிகளுக்கு முடிவுத் திகதி 31 - 10 - 1995.

சம்பள அளவுத்திட்டம்:

1. பேராசிரியர் ரூபா 16,100—6x400—18,500/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I ரூபா 12,725 — 8x325 — 15,325/- மாதமொன்றுக்கு
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II ரூபா 10,650 — 5x325 — 12,275/- மாதமொன்றுக்கு
4. உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

துறைத்தலைவரினதும், பீடத்தலைவரினதும் ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளருக்கு (தகுதிகாண்), விரிவுரையாளர் (தகுதிகாண்) என பதவி பெயர் அளிக்க முடியும் என்பதுடன் அவரைத் துணைவேந்தர் ரூபா 6,050 — 10x250 — 8,550/- மாதமொன்றுக்கு, சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கலாம்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) பட்டதாரிகள் நிலையான சம்பளத்தில் ஓராண்டுக்கு உதவி விரிவுரையாளராகப் பணிபுரிய வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டு விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்.

இத்துடன்

அ. "1995ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை நிலுவையிலுள்ள" வேலைகளை நிறைவேற்றும்" படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

ஆ. ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப்படியின் 10 வீதமும் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப்படியாகச் செலுத்தப்படும்.

இ. 1993 மே 12ஆம் திகதிய 9/93 இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.
தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் சிறப்புக்கொடிச் சிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைப் பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 2/- ரூபா முத்திரை யொட்டப்பட்ட 23 X 10 ச. மீ. அளவுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்குறித்த விண்ணப்பப் படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு - 13, ஆட்டுப்பட்டித்தெரு 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995 - 09 - 19

(ஓ-2370)

## பெருமாள் கோவில் சப்பரத் திருவிழா

கொழும்புத்துறை, ஒக். 1
யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் வருடாந்த உற்சவத்தில் இன்று மாலை சப்பரத் திருவிழா நடைபெறும்.
நாளை வேட்டைத் திருவிழாவும், செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறும். (அ-30)

## ஆண்டு விழா

வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவுவிழாவும், 8 ஆவது சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 - 30 மணிக்கு கழகத் தலைவர் திரு. சி. குலசிங்கம் தலைமையில், கழகமண்டபத்தில் நடைபெறும்.
பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தலைவர் லயன் வே. தில்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ)

## துப்பாக்கி வெடித்து இளைஞர் காயம்

வேட்டைக்காக எடுத்துச் செல்லப்பட்ட துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.
கைதடியில் வெள்ளி காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் துப்பாக்கியை எடுத்துச் சென்றவரான முருகேசு ஜீவராசா (வயது 21) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.
காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## சைவநெறி செயற்பாட்டு போட்டிகள்

சைவநெறிச் செயற்பாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி கோட்டமட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்ற சாவகச்சேரிக் கோட்ட போட்டியாளர்களுக்கான வலய மட்டப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது என்று பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவிக்கிறார். (எ)

## புலிகளின் குரல் வானொலியில்

**01 – 10 – 1995**
**ஞாயிறு இரவு**

- ★ 8-02 — நீங்கள் கேட்டவை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம் - பொன். கணேசமூர்த்தி எழுதிய "இலங்கை மண்" அங்கம் 13

**02– 10 – 1995**
**திங்கள் காலை**

- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

**ஞாயிறு மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — [illegible]
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — உங்கள் தெரிவு

உ

## கேதாரகெளரி காப்பு

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் கோவில் கேதாரகௌரி விரதகாப்பு வழமை போல் இம்முறையும் அடியார்களின் வசதி கருதி யாழ். கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோவிலில் வழங்கப்படும் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருகிறோம். 03- 10- 95 செவ்வாய்க்கிழமை கேதாரகௌரிவிரதம் ஆரம்பமாகி 23-10-95 திங்கட்கிழமை வரை இருபத்தொரு தினங்களுக்கு விஷேசபூசைகள் நடைபெறும்.
கேதாரகௌரி காப்பு பெற விரும்பும் அடியார்கள் முன்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
இலங்கைநாயகி மனோன்மணி
அம்பாள் கோவில்

சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
பத்திரகாளி கோவில்
திருகோணமலை

[38785]

உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவில்

யாழ். மிட்ரவுண் றோற்றறக்ற் கழகம் நடத்தும்

# பரிசளிப்பு விழா

இடம்;- நாவலர் கலாசார மண்டபம், நல்லூர்
காலம்:- 01-10-1995 மாலை 3. 00 மணி

யாழ். இந்துக கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 08-09-95 அன்று நடைபெற்ற கண்காட்சியில் இடம்பெற்ற போட்டிகளில் பரிசில்கள் பெறுவோர் விவரம்

## கோலப் போட்டி

**பாடசாலை ரீதியாக**

1ஆம் இடம் — செல்வி இராமலிங்க சர்மா வனஜா
2ஆம் இடம் — செல்வி இராஜேந்திரன் ரேணுகா
3ஆம் இடம் — செல்வி சோமசுந்தரக் குருக்கள் குமுதா

**தனியார் ரீதியாக**

1ஆம் இடம் — செல்வி பாலசுப்பிரமணியம் நித்தியா [பெண் போராளி]
2ஆம் இடம் — செல்வி மார்க்கண்டு சூரியகுமாரி
3ஆம் இடம — செல்வி நடராஜசர்மா அன்பரசி

## கேக் ஐசிங் போட்டி

**பிறந்த நாள் கேக்**

1ஆம் இடம் - செல்வி பஞ்சரட்ணம் சிவானுஜா (அனித்தா பாடசாலை)
2ஆம் இடம் — செல்வி தெய்வேந்திரம் சுகிர்தா [யோகி மனையியல் பாடசாலை]
3ஆம் இடம் செல்வி சரவணபவன் உமா [யோகி மனையியல் பாடசாலை)

**திருமண வைபவ கேக்**

1ஆம் இடம — சதாசிவம் சுகந்தி [யோகி மனையியல் பாடசாலை]
2ஆம் இடம் — இரட்ணசிங்கம் சத்தியவாணி (யோகி மனையியல் பாடசாலை)
3ஆம் இடம் — பொன்னப்பு செல்வமலர் [யோகி மனையியல் பாடசாலை]

**சீனி அலங்காரம் [கேக்]**

1ஆம் இடம் — செல்வி சரவணபவன் உமா (யோகி மனையியல் பாடசாலை]
2ஆம் இடம் — செல்வி தெய்வேந்திரம் சுகிர்தா (யோகி மனையியல் பாடசாலை)
3ஆம் இடம் — செல்வி ஜெயராஜா சுமித்திரா (யோகி மனையியல் பாடசாலை)

## தலைமுடி அலங்காரம்

1ஆம் இடம் — செல்வி சோமறஞ்சனி சோமசேகரம்
2ஆம் இடம் - செல்வி றஜனி தளையசிங்கம்
3ஆம் இடம் — செல்வி ஜெயந்தி பொன்னுச்சாமி

குறிப்பு:-
பரிசில்கள், சான்றிதழ்கள் பெறும் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்

(சி/2386)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜனி - ஜெயலலிதா முறுகலின் பின்னணி

ஜெயலலிதாவைக் கடுமையாக எதிர்ப்பதில் ரஜனி தீவிரமாக இருந்தாலும் அரசியல் களத்தில் ஜெயலலிதாவைச் சந்திக்க ரஜனி பின்னடிக்கிறார். இந்த பின்வாங்கலுக்கு காரணம் என்னவென்பதை இக்கட்டுரைத் தொடர் ஆராய்கின்றது

தமிழக மடல்

தொகுப்பு: கவி

சாதாரண பஸ் கண்டக்டராக இருந்து தமிழக சினிமாவில் வில்லனாக அறிமுகமாகி கதா "நாயகனாக" உயர்ந்து "சுப்பர்ஸ்டார்" ஆக விஸ்வரூபம் எடுத்தவர் ரஜனிகாந்த்.

அவர் தமிழக அரசியலில் குதித்து தமிழகத்தை ஒரு கலக்கு கலக்குவாரா என்று பலரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சமயத்தில்—

அந்த "சஸ்பென்ஸை" புஸ்வாணம் ஆக்குவது போல் போட்டு உடைத்திருக்கின்றார் ரஜனி.

தமிழக அரசியலில் பல வருடங்களாக கிளப்பப்பட்டுவந்த கேள்விகளுக்கு ஒட்டுமொத்தமாக தமது பதில் மூலம் ரஜனி முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் என்று கூறலாமா?

இல்லை பாய்வதற்காக பதுங்குகின்றார் ரஜனி என்றுதான் தமிழக அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அரசியலில் குதிக்கும் எண்ணம் தனக்கு அடியோடு இல்லை என்று கடந்த புதனன்று ரஜனிகாந்த் பகிரங்கமாக விடுத்த அறிவிப்புக்கு அவர்கள் கூறும் அர்த்தம் இதுதான்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் ரஜனிகாந்துக்கும் இடையிலான கசப்புணர்வு இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

ஜெயலலிதா பதவிக்குவந்த நாள் முதலே இருவருக்கும் இடையே குரோதம் வளர ஆரம்பித்தது.

சென்னை போயஸ்கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் "அரண்மனைக்கு" அருகில் தான் ரஜனியின் வீடும் உள்ளது.

### கொதித்தார் ரஜனி

ஜெயலலிதா முதல்வரானதும் அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு கெடுபிடிகளால் ரஜனியின் சுதந்திரமும் தனிப்பட்ட வாழ்க்கையும் பாதிக்கப்பட, கொதித்துப் போனார் ரஜனி.

ரஜனியின் வீட்டுக்குச் செல்லும் அவரின் நண்பர்கள், ஆதரவாளர்கள், ரசிகர்கள், உறவினர்கள் எல்லோரும் ஜெயலலிதாவின் பாதுகாப்பு வட்டத்தினால் கெடுபிடிக்கு உள்ளாகினர்.

இந்தக் கெடுபிடிகளினால் கோபமுற்று ரஜனி பொருமிக் கொண்டிருந்த போது, ஜெயலலிதாவுக்கு எதிராக ரஜனி தமிழக அரசியலில் குதிப்பார் என்ற ஊகமும் மெல்ல மெல்ல அடிபடத் தொடங்கியது.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த கையோடு இந்த ஊகமும் பரவத் தொடங்கியது அதை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக மறுக்காத. ரஜனி அவ்வப்போது "பொடி" வைத்து கருத்துக் கூறத் தொடங்கினார். அதில் ஜெயலலிதாவின் போக்குக்கு "வெடி" வைக்கும் கருத்துக்கள் இருந்தன.

> "மக்களுக்கு சேவை செய்யாது தனது சுய நலத்துக்கும் ஆடம்பர ஆர்ப்பாட்டத்துக்கும் ஆட்சியைப் பயன்படுத்துகிறார் ஜெயலலிதா. அடுத்த பொதுத் தேர்தலில் மீண்டும் அவரை ஆட்சியில் அமர்த்தினால் தமிழக மக்களை ஆண்டவனால்கூட காப்பாற்ற முடியாது." —கடந்த புதனன்று பகிரங்கமாக இவ்வாறு அறிவித்தார் ரஜனிகாந்த்

மூன்றரை வருடங்களுக்கு முன்னர் அப்போதைய "புதிய" முதல்வர் ஜெயலலிதாவுக்கு தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் "அரசியலுக்குப் போனால் மனநிம்மதியை இழக்க வேண்டிவரும் என்பதால் அரசியலுக்குப் போக நான் விரும்பவில்லை— என்று ஜெயலலிதாவை வைத்துக் கொண்டு கூறினார் ரஜனி.

ஆனால் அதே மேடையில் அடுத்த நிமிடம் 'ராஜீவ் பிரதமராவார் என்று முன்கூட்டியே கூற முடிந்ததில்லை. சஞ்சய்காந்தி இறந்ததால் ராஜீவ்காந்தி அரசியலுக்குவந்தார். அரசியல் வேண்டாம் என்று கூறிவிட்டு ஓய்வுபெறச் சென்ற நரசிம்மராவ் பிரதமரானதும் முன்கூட்டியே கூற முடியாத. நிகழ்ச்சிதான் நான் நேற்று— பஸ் கண்டக்டர் இன்று— சுப்பர்ஸ்டார் நாளை— என்ன என்பது யாருக்குத் தெரியும்? கடவுளுக்குத்தான் வெளிச்சம்"— என்று தமது அரசியல் பிரவேசம் பற்றிய "சஸ்பென்ஸ்களுக்கு" கமா வைத்துப் பேசினார்.

### ஜெயலலிதா மீது நேரடித் தாக்குதல்

ஜெயலலிதா மீதான அடுத்த நேரடித் தாக்குதலை, சிவாஜிகணேசனுக்கு செவாலியர் விருது கொடுக்கப்பட்டதைப் பாராட்டி திரை உலகம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் எடுத்த பெருவிழாவில் வைத்து நேரடியாகத் தொடுத்தார் ரஜனி.

ஜெயலலிதாவை மேடையில் வைத்துக்கொண்டே

## பதுங்குகின்றாரா "சுப்பர்-ஸ்டார்?"

உங்கள் அரசினால் உருவாக்கப்பட்ட சினிமா நகர் ("பிலிம் சிற்றி") திறப்பு விழாவில் சிவாஜியை நீங்கள் கௌரவிக்கவில்லை. "பிலிம் சிற்றிக்கு" உங்கள் பெயரையே வைத்து விட்டீர்கள் இப்போது சிவாஜியைப் பாராட்டும் இந்த விழாவில் பங்கு கொண்டதன் மூலம் உங்கள் தவறுக்கு பிராயச்சித்தம் செய்கின்றீர்கள்" — என்று பேசினார் ரஜனி.

இந்தப் பேச்சுடன்தான் ரஜனி—ஜெயலலிதா மோதல் சூடுபிடிக்கத் தொடங்கியது.

இந்த மோதலின் உச்சக்கட்டமாக அமைந்தது "பாட்ஷா" திரைப்படவிழாவில் ரஜனி ஆற்றிய உரை.

### பலிக்கடா ஆனார் வீரப்பன்

ரஜனியின் உரைக்கு பலிக்கடா ஆனவர் ஆர். எம். வீரப்பன்.

திரைப்பட இயக்குநர் மணிரத்னத்தின் வீட்டின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலினால் கோபமுற்றிருந்த ரஜனி, தமது கோபத்தை பாட்ஷா திரைப்படவிழாவில் கொட்டித்தீர்த்தார். அது நேரடியாக ஜெயலலிதாவுக்கு சாட்டையடியாக வீழ்ந்தது.

"தமிழகத்தில் வெடிகுண்டு கலாசாரம் முற்றிவிட்டது இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் தமிழ்நாடு சுடுகாடாகிவிடும்."—என்று ஜெயலலிதா ஆட்சிக்கு சூடு கொடுத்துப் பேசினார் ரஜனி.

அந்த மேடையில் இருந்த தமிழக அமைச்சர் ஆர். எம். வீரப்பன், ரஜனியின் பேச்சுக்கு பதிலடி கொடுக்காமல் சும்மா இருந்ததால் அ. தி. மு. கழகக் கண்மணிகள் கொதித்துப் போய்விட்டார்கள். ரஜனி மீதான கோபம் ஆர். எம். வீரப்பன் மீது திரும்பியது.

வீரப்பனுக்கு எதிராக அ. தி. மு. கவுக்குள் போர்க்கொடி கிளம்ப, அதனை உதாசீனப்படுத்தி விட்டு அடிக்கடி ரஜனியுடன் தொடர்பு கொண்டார் வீரப்பன்.

இதனால் சீற்றமடைந்த "ஜெயலலிதாம்பிகை" முதலில் ஆர். எம். வீரப்பனிடமிருந்து முக்கிய அமைச்சான உணவுத் துறையைப் பிடுங்கினார். சில வாரம் கழித்து அமைச்சர் பதவியிலிருந்து [illegible] பட்டது; இருவாரங்களுக்குப் பின்னர் கட்சியிலிருந்தும்— அ. தி. மு. க. விலிருந்தும்— தூக்கி வீசப்பட்டார் வீரப்பன். இப்போது அவர் வெறும் சுயேச்சை எம். எல். ஏ தான்.

### அடுத்த அடி

தன்னால் பிறர் பாதிக்கப்படுவதை எப்போதும் விரும்பாத ரஜனி, ஆர். எம் வீரப்பனின் பதவி பறிக்கப்பட்டதால் கொதித்துப் போனார். உடனே பத்திரிகையாளர்களைக் கூட்டி ஆளும் கட்சிக்கு அடுத்த கட்ட அடி கொடுத்தார்.

"ஆர். எம். வீரப்பன் பெரிய மனிதர், சிறந்த அரசியல்வாதி. அந்த நல்ல ஆத்மாவை இழந்து விடாதீர்கள்." — என்றும் ஆளும் கட்சிக்கு ஆலோசனை கூறியவர், "நான் சாதாரண மனிதன்; என்னைப் பெரிய மனிதனாக்கி விடாதீர்கள்"—என்ற பாணியில் பதிலளித்து ஜெயலலிதாவுக்கும் அவரது கூட்டத்தவர்களுக்கும் எச்சரிக்கை கொடுத்தார்.

தமது எச்சரிக்கையையும் மீறி வீரப்பனின் பதவி பறிக்கப்பட்டதைக் கண்டு எரிச்சலுற்ற ரஜனி— "வீரப்பனை நீக்கியதற்கான தகுந்த பதிலடியை தேர்தலில் மக்கள் கொடுப்பார்கள். அப்போது என்னை நொந்து பயனில்லை —என்றவாறு காட்டமாகக் கூறினார்.

### ரஜனிகாந்துக்கு ஆதரவுக் கரம்

இவ்வாறு ஜெயலலிதாவுடன் முரண்பட்டு வந்த ரஜனிக்கு ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளிடமிருந்தும் ஆதரவுக்கரம் நீட்டப்பட்டது. ரஜனிக்கு கொம்பு சீவிவிடும் வேலையை அ. தி. மு. க. தவிர்ந்த அனைத்துக் கட்சிகளுமே முன்னின்று செய்தன.

தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன், தி. மு. க. தலைவர் கருணாநிதி, ம. தி. மு. க தலைவர் வை. கோபாலசாமி, எம். ஜி. ஆர்., அ. தி. மு. க. பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, இடது கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சங்கரய்யா, முன்னாள் அமைச்சர் ராஜாராம் உட்பட பலர் ரஜனி அரசியலுக்கு நுழைவதை வரவேற்று கருத்து வெளியிட்டனர்; அல்லது அரசியலுக்கு வருமாறு ரஜனியை வற்புறுத்தினர்.

மறுபுறத்தில் தமிழகம் முழுவதிலும் உள்ள 15 ஆயிரத்துக்கும் அதிகமான ரஜனி ரசிகர் மன்றங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் வேறு அரசியலில் குதிக்கும்படி ரஜனியை நச்சரிக்கத் தொடங்கினர்.

### ரசிகர்களின் கொதிப்பு

"ஆணையிடு தலைவா! உனக்காக உயிர்கொடுக்க நாங்கள் ஆயிரக்கணக்கில் தயாராக இருக்கின்றோம்" — என்று கூறி தினசரி ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை ஆங்காங்கே நடத்தத் தொடங்கினர்.

மொத்தத்தில் அரசியலில் ரஜனி குதித்தால், "ரஜனி அலை" ஒன்றே தமிழகத்தில் சூறாவளியாக அள்ளி வீசக்கூடிய சூழ்நிலை உருவாகி வந்து கொண்டிருந்த வேளையில் —

"வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த" கதையாக, தாம் அரசியலில் குதிக்கப்போவதில்லை என்று கடந்த புதனன்று அறிவித்து, எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் போட்டு உடைத்தார் ரஜனி.

ரஜனியின் இத்திடீர் முடிவுக்குக் காரணம் யாது? உண்மையில் ரஜனி அரசியல் பக்கம் இனி தலை எடுத்து வைத்துப் படுக்கமாட்டாரா? அவரின் அடுத்த திட்டம் என்ன? — இக்கேள்விகளுக்கு தமிழக அரசியல் வட்டாரங்களில் கூறப்படும் விளக்கங்கள், பதில்கள் என்னவென்பதை அடுத்த இதழில் பார்ப்போம். ★




சோமர்; என்ன தியாகர்! அரசியலை விளாசு விளாசென்டு விளாசிறீர்?

தியாகர்: நுணுக்குக்காட்டி வாசிச்சா நீரும் எடுத்தெடுத்து விளாசலாம்!

நுணுக்குக்காட்டி

புதுமையான மாத வெளியீடு!

ஆங்கில தமிழ் செய்தி ஊடகங்களின் வரிகளிடைப் புகுந்து திரட்டியவை

அரசியலின் இலகு உசாத்துணை; என்றும் பேணவேண்டிய ஆவணம்!

புதன்கிழமை வெளியாகிறது!

(38776)


# வடமராட்சி கிழக்கு மக்கள் தென்மராட்சியில் தஞ்சம்

தென்மராட்சி, ஒக். 1

தென்மராட்சிப் பகுதியின் வரணி வடக்கு தொடக்கம் கொடிகாமம் சந்திவரையுள்ள பாடசாலைகள், ஆலயங்கள், வீடுகள் ஆகியவை வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களால் நிரம்பி வழிகின்றன.

வடமராட்சி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்ற ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களை அடுத்து வெளியேறிய மக்கள் இப்பகுதிகளிலும் மேலும் பளை வரையும் வந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். (ஒ-117)

# பிரான்ஸின் நீர்மூழ்கிகள் பாகிஸ்தானுக்கு விற்பனை

## இந்திய அமைச்சர் அதிருப்தி

நியூயோர்க், ஒக். 1

பாகிஸ்தானுக்கு நீர்மூழ்கிகளையும், ஏவுகணைகளையும் பிரான்ஸ் விற்பனை செய்வதை இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, நியூயோர்க்கில் வைத்து பிரான்ஸ் வெளியுறவு அமைச்சரிடம் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

இதன் மூலம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஆயுதப் போட்டி தூண்டி விடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் பெண் நாயும் 1 மாதத்திற்குள் குட்டி ஈனும் நிலையிலுள்ளது) 2½ மாதம் நிரம்பிய ஆண் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 698/15, தலையாழி, சபாபதி - வீதி, (வைரவர் கோவிலடி) யாழ். [38773]

யமகா நியூஸ் மேற்- 50 மோட்டார் சைக்கிள் நீல நிறம் விற்பனைக்குண்டு. டாக்டர் வசந்தமாலா, 5ஆம் சட்டை அரசடி, கோப்பாய் வடக்கு. கோப்பாய் சந்திக்கும் ராச பாதைக்கும் இடையில் பிரதான வீதியில். [38757]

### வீடு விற்பனைக்கு

தென்னை, மா, பலா பயிருடன் எல்லா வசதிகளும் கொண்ட வீடு (16 பரப்பு) கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 15 சென். பீற்றர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (அடைக்கலமாதா கோயிலுக்கு சமீபமாக) [38771]

### விதை நெல் விற்பனைக்கு

உயர்ந்து வளர்ந்து நல்ல விளைவைத் தரக்கூடிய 3½ மாத "இளங்கலையன்" நெல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (8751)

### O/L கணிதம், ஆங்கிலம்

Distinction Credit பெறுபேறடைய (2 மாதங்களில்) இதுவரையும் பெறுபேறடையாதவர்களுக்கும் அனுபவமுள்ள B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [8653]

### மணமகன் தேவை

28 வயது [விசாகம் 7இல் செவ்வாய்] படித்த, அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை ஜாதகத்துடன் தொடர்பு கொள்க: வி. இல. 853, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [38766]

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த, 27 வயதுடைய குற்றமற்ற, அழகிய படித்த மணமகளுக்கு உயர் பதவியில் உள்ள நற்குணமுள்ள மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 851 மே/பா உதயன் யாழ்ப்பாணம். [38683]

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய குற்றமற்ற அழகிய பட்டதாரி மணமகளுக்கு பட்டதாரி, கணக்காளர், டாக்டர், எஞ்சினியர், சட்டத்தரணி விரும்பத்தக்கது தொடர்பு: வி இல 850 மே/பா உதயன் (38653)

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுத, பலன் பார்க்க கல்வி, திருமணம் தொழில், எதிர்காலப் பலன் விவாகப் பிரச்சினைகள், செவ்வாய், ராகு தோசம் நீங்க ஜாதகக் குறிப்புடன் வரவும். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (38696)

### மிருதங்கம்

புதிய மிருதங்கம் மற்றும் திருத்த வேலைகள் மிருதங்கம், தபேலா, டோல்கி முழு வேலையும் உறுதியாக செய்து ஒரு கிழமைக்குள் குறைந்த செலவில் நல்ல முறையில் தரப்படும். கோ. விஜயகுமார், இல. 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். [38716]

### ENGLISH

An 'Englit' Tutor helps year 9, 10 and other Students Individually Offering O/L English Literature in and after 1996 Contact: The 'Englit' Tutor Siva Illam New Chemmany Street Nallur North, Jaffna (38743)

### மணமக்கள் தேவை

27 வயது, செவ்வாய் குற்றமற்ற, படித்த, அழகான பெண்ணுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணமகனையும், பிரபல வியாபாரிக்கு உத்தியோகம் பார்க்கும் 30 வயதிற்குட்பட்ட அழகான மணமகளையும் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். கலப்புத் திருமணம் விரும்பத்தக்கது தொடர்பு: இல. 978, மே/பா உதயன். [8752]

### உச்சப் புள்ளி பெற

மூன்றாம் தவணைத் தேர்வில் தமிழ்மொழிப் பாடத்திலே உச்சப்புள்ளி பெற துணைபுரியும் ஒரே ஒரு நூல்வரிசை "தமிழ் மொழி செயல் நூல்" ஆண்டு 8 தொடக்கம் ஆண்டு 11 வரை ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (8654)

### காணவில்லை

இளவாலை - மயிலங்காடு ஆகிய எனது றலி சைக்கிள், தேசிய அடையாள அட்டை (44320144V), அலுவலக அடையாள அட்டை, உலர் உணவு அட்டை [இரண்டு], வீட்டின் திறப்புக் கோர்வை கள் இரண்டு ஆகியன கன்னாகம் மின்சார நிலையத்தில் காணாமல் போய்விட்டன. தகவல் தெரிந்தவர்கள் இ. மயில்வாகனம், பரமேஸ்வரி, அம்பாள் வீதி, தபாற்கந்தோரடி, கோப்பாய் தெற்கு எனும் முகவரிக்கு அறிவிக்கவும். (38755)

### O/L கணிதம்

O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி [38746]

### சித்திர வகுப்புகள்

3-10-95 [செவ்வாய்] புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இல. 6, பென்ரிக்கோஸ் லேன், கண்டி வீதி, கச்சேரியடி. (38749)

---

தென்மராட்சி, தீவக உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும்

## இறுதிப் போட்டி

இடம்: சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம்.

இன்று 01 – 10 – 1995 பி. ப. 3-00 காட்சியாட்டம்

இளவாலை யங்ஹென்றிசியன் வி. க. அணி எதிர் ஊரெழு றோயல் வி. க. அணி

பி. ப. 4-00 இறுதியாட்டம்

மட்டுவில் மோகனதாஸ் வி. க. அணி எதிர் புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி

அன்பளிப்பு: ரூபா 10/-

விளம்பர அன்பளிப்பு:
லிங்கம் மணப்பந்தல் – NTR வீடியோ
கைதடிச்சந்தி, கைதடி.
(38752)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 – 11 – 1937



மறைவு: 01 – 10 – 1993

### அமரர் றொபேட் தம்பிரெட்ணம்
(இரட்ணானந்தன்)

நின்று போன வாழ்வை எண்ணி
நெஞ்சம் ஏங்குதே — இன்று
விழியோரம் நீர் சுரக்க விதியோரம்
போகின்றோம்.
சதியாக நீ வந்து காத்தருள்வாய்.

இவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மகள், தாய்,
சகோதரர், உறவினர்

5/3 அச்சகக்கட ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(38766)

---

இன்று மாலை 6-30 மணிக்கு
யா/கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில்
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தயாரிப்பில்
நாடக அரங்கக் கல்லூரியினர்
வழங்கும்

## நாமிருக்கும் நாடு நமது
நாடகம்

★ அனுமதிச்சீட்டுக்கள் மண்டபவாயிலில்

[சி-2378]

---

## A/L 96
### கணித, உயிரியற் பிரிவு

பகல் முழுநேர வகுப்பு
மாலை இரவு நேர வகுப்பு

**ஆரம்பம்: 06 - 10 - 1995**

திரு. தில்லைநாதன், திரு. குமரன், திரு. ஞானி, திரு. வர்ணம் திரு. கெங்காதரன், திரு. ஐங்கரநேசன், திரு. குணம்.

★ அனுமதிகள் 03-10-95 அன்று காலை 9மணியிலிருந்து மாலை 5மணிவரை மாத்திரமே வழங்கப்படும்.

★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்.


★ பகல் முழுநேரவகுப்பில் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

## யூனிவேர்சல்
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(சி/2380)

---

## அந்தியேட்டி அழைப்பு



### கந்தையா பொன்னுச்சாமிஐயர்
(தையிட்டி, காங்கேசன்துறை)

பிறப்பு: 27 — 06 — 1914
இறப்பு: 12 — 09 — 1995

இன்று 01 - 10 - 1995ஆம் திகதி ஞாயிறு அன்னாரது மஞ்சத்தடி லேன், இணுவில் கிழக்கு இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

இணுவில் கிழக்கு.

(38765)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. மேற்கு பகுதி மக்களில் பலர் சொந்த இடங்களுக்கு திரும்பினர்

## 60 வீத மாணவர்கள் பாடசாலைகளுக்கு சமுகம்

வலி. தெற்கு, ஒக். 1
"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த வலிகாமம் மேற்கைச் சேர்ந்த பல குடும்பங்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு சென்றுள்ளார்கள்.

வலிகாமம் மேற்கைச் சேர்ந்த சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகள் பலவும் வழமை போல் இயங்கி வருகின்றன.

இக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் மொத்த மாணவர்களில் 60 வீதமான மாணவர்கள் தற்போது பாடசாலைகளுக்கு வருகை தருவதாகவும் —

மேலும் இதே போன்ற நிலை நீடிக்குமானால் இன்னும் 20 வீதமான மாணவர்கள் பாடசாலைகளுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப் படுவதாகவும் —

சங்கானைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மூளாய் - அராலி, வட்டுக் கோட்டை, சுழிபுரம், பண்ணாகம் போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளில் சுமார் 75 வீதத்துக்கும் கூடுதலான மாணவர்கள் தினமும் சமுகமளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பிரிவிலுள்ள பல குடும்பங்கள் கிளிநொச்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளுக்குச் சென்றுவிட்டதால் அவர்களின் பிள்ளைகள் தொடர்ந்து பாடசாலைக்கு வரமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-152)

---

## வலிவை சிதம்பரா பழைய மாணவர் தினம்

யாழ்ப்பாணம், ஒக். 1
வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பழைய மாணவர் தினமும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ)

## சிறுவர் விளையாட்டு

யாழ்ப்பாணம், ஒக் 1
தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவினரால் நடத்தப்படும் கார்த்திகா சிறுவர் அறிவாலயத்தின் நான்காம் ஆண்டு விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி மைதானத்தில் திரு வே. செல்வஜோதி தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் கலந்து கொள்வார். (எ)

## சுதந்திரப் பறவைகள் வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஒக். 1
விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் பத்திரிகையின் செப்ரெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் உலகமகளிர் மாநாட்டில் தமிழீழப் பெண்களின் உரிமைக் குரல், கல்வியின் அடித்தளம் நிச்சயம் புதிய வகையில் செப்பனிடப்படல் வேண்டும் என்ற செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனியுடனான பேட்டி. சிக்கல்களில் இருந்து கைதூக்கி விட, உழுதமண்ணும் உருக்குலைந்த வாழ்வு, போராட்டமே எமது வாழ்க்கை; வாழ்க்கையே எமது போராட்டம் என்ற தேசியத் தலைவரின் செய்தி உட்பட பல கட்டுரைகள், கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன. (எ)

## மட்டு. ரயில் 3 தினங்களுக்கு மட்டுமே

கொழும்பு, ஒக். 1
தினமும் நடைபெற்று வந்த கொழும்பு — மட்டக்களப்பு ரயில் சேவை நேற்று முதல் வாரத்தில் 3 தினங்கள் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய், வியாழன், சனிக் கிழமைகளில் மட்டக்களப்பு வரையும் செல்லும் இந்த ரயில், ஏனைய நான்கு தினங்களும் பொலன்னறுவை வரை மட்டுமே செல்லும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைக்குஇணங்கவே இம்முடிவு எடுக்கப்பட்டதாக ரயில்வேப் பகுதியினர் தெரிவித்தனர்.

(ஒ-6)

---

யாழ்ப்பாண மாநகர சபை

# கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழித்தல்

சமீப காலமாக மக்களின் இடப்பெயர்வின் நிமித்தம், கைவிடப்பட்ட வளர்ப்பு நாய்களும், கட்டாக்காலிகளாக நகரத்தில் அலைவதினாலும், நோய்த் தடுப்பூசி மருந்து இல்லாமையினால் விசர்நாய்க்கடி உயிர் கொல்லி நோயாக மாறிவரும் அபாயத்தினைக் கருத்திற் கொண்டும், கட்டாக்காலி நாய்களைப் பிடித்தழிக்கும் செயற்பாடு எம்மால் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பங்களில் நாயை வளர்ப்போரின் கவனயீனத்தினால், வீதிக்கு வருகின்ற வளர்ப்பு நாய்களும் பிடித்தழிக்கப்படும் நிலையேற்படுகின்றது. தமது செல்லப்பிராணிகள் இவ்வாறு பிடித்தழிக்கப்படுவதை எவரும் விரும்பாதிருப்பது நியாயமே. ஆனாலு கட்டாக்காலி நாய்களால் ஏற்படக் கூடிய ஆபத்தான விளைவுகளைக் கருத்திற்கொண்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆகவே நாய்களை வளர்ப்போர் அவற்றை வளவுக்கு வெளியே வரவிடாது வளர்ப்பதுடன் மாநகரசபையால் வழங்கப்படுகின்ற உரிமத் தகட்டினைப் பெற்று நாய்களின் கழுத்தில் கட்டியும் நாய்களுக்கு தடுப்பூசி போடும் சந்தர்ப்பங்களை தவறாமல் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1995 - 09 - 27 (சி-2379)

---

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 02 — 1952

உதிர்வு: 01 — 10 — 1990

## திருமதி கெங்காதேவி நடேசன்

(முன்னாள் இலங்கை வங்கி சுன்னாகக்கிளை ஊழியர்)

திதி: 05 - 10 - 1995

அன்பு மொழி பேசி அள்ளி விளையாடி
கல்வி வழிகாட்டி கனிவான எம்மை வளர்த்த -
அம்மாவே

ஆண்டு ஐந்து அகன்றாலும்
ஆறுமோ அம்மா உங்கள் பிரிவு
எங்கு சென்றாய் எம்மை விட்டு
ஏங்குகின்றோம் உன் அன்புக்காய்

சகோதரர்கள், தாய்,
கணவன், பிள்ளைகள்
(ந. உதயசேகர், ந. உதயகுமார்)

கொல்லங்கலட்டி.
தெல்லிப்பழை [38767]

---

தேசிய பாதுகாப்பு நிதி:

# நீர்வேலி அத்தியாரில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 01
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேசிய பாதுகாப்பு நிதி சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களில் ஒவ்வொருவரை கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு கோப்பாய் வட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

பத்தமேனி [யா/281], கதிரிப்பாய் [யா/282], இடைக்காடு [யா/283], வளலாய் [யா/284], அச்சுவேலி வடக்கு [யா/285], அச்சுவேலி தெற்கு [யா/286], அச்சுவேலி மேற்கு [யா/287].

மேற்குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள சனசமூக நிலையங்கள், கோவில்கள், ஐக்கிய நாணய சங்கங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்களில் ஒவ்வொருவரை இன்றைய தினம் பி. ப. 3-30 மணிக்கு அங்கு நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(ஒ)

சித்திரவதைக்கு ஆளான

# மட்டு. தமிழ் இளைஞருக்கு ரூ. 20 ஆயிரம் நஷ்டஈடு

கொழும்பு, ஒக். 1
சித்திரவதைகளுக்காளான மட்டக்களப்பு தமிழ் இளைஞர் ஒருவருக்கு நஷ்டஈடாக 20 ஆயிரம் ரூபாவை வழங்க அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் செலவுத் தொகையாக 3ஆயிரம் ரூபா வழங்கவும் உயர்நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

பழுகாமம் இராணுவ முகாமிற்கு முன்னால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இந்த வாலிபர் கடந்த ஆண்டு [1994] மார்ச் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். மட்டக்களப்பில் பயங்கர சித்திரவதைக்கு ஆளான இவர் தற்போது கொழும்பு மகசீன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

சித்திரவதையின் போது இவருக்கு உடலில் 55 காயங்கள் ஏற்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

# நாகர்கோவில் குண்டுவீச்சு; அரசு இப்போது ஏற்கிறது

கொழும்பு, ஒக். 1
யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் (நாகர் கோவில் சம்பவம் உட்பட) 70 பேர் இறந்திருக்கக்கூடும் என்பதை இலங்கை ராணுவம் ஏற்றுக் கொண்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ராணுவப் பேச்சாளர் கருத்துத் தெரிவிக்கையில் —

சம்பவ தினம் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்ததாக தங்களுக்கு தவறான தகவல் கிடைத்திருந்ததாக கூறி உள்ளார் என்றும் வெரித்தாஸ் தெரிவித்தது.

பாடசாலை மீதான குண்டு வீச்சுத்தாக்குதலை ராணுவப் பேச்சாளர் முன்னர் மறுத்தது தெரிந்ததே. (இ-எ)

# நாகர்கோவில் மக்களுக்கு ஒரு வார நிவாரணம்

வடமராட்சி, ஒக். 1
விமானத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள நாகர்கோயில், மணற்காடு ஆகிய கிராமங்களைச்சேர்ந்த மக்களுக்கு உடனடியாக ஒரு வார காலத்துக்கான உலர் உணவு வழங்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க கிளைகள் ஊடாக இந் நிவாரணம் வழங்கப்பட உள்ளது.

இதேவேளை —

பாதிக்கப்பட்ட நாகர் கோவில், மணற்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவினர் உடனடியாக உலர் உணவு நிவாரணம் வழங்கி வருகின்றனர்.

[ஒ-எ-173]

---

முதலாவது

# பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்

## ★ கிருபாலன் சுபாங்கன் ★

சோணாமலை வீதி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கிருபாலன் - கிருபாலினி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் சுபாங்கன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (01 - 10 - 1995) ஞாயிறு தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அக்கா கௌசியா, அண்ணா சுவிதன், அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, அருந்தவம் மாமா, மாமிமார், சித்திமார், அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றனர்.

தகவல்:
கிருபா நகைப் பூங்கா,
333 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(38775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது

## ஒளிவீச்சு OLIVEECHU

விடுதலைப் புலிகள் நிதர்சனம் நிறுவனத்தினரின்
மாதாந்த வீடியோ சஞ்சிகையான

## ஒளிவீச்சின் ஓகஸ்ற் மாத சஞ்சிகை வெளிவந்துவிட்டது

* தமிழீழத்தின் இன்றைய அரசியல் நிலைமைகளையும் ஸ்ரீ லங்கா அரசின் முப்படைகள் மீதும் விடுதலைப் புலிகள் தொடுக்கும் தாக்குதல் வடிவங்களையும் உள்ளடக்கிய **சமகாலப் பார்வை** எனும் அரசியல் பார்வை.

**விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திரு. பாலகுமாரனின் படைப்பு**

* முல்லைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்ட இரு டோறாப் பீரங்கிப் படகுகள் தொடர்பான காட்சிகள்.
* பாரம்பரியமாக தமிழ் மக்களால் பேணப்பட்டு வரும் எமது கலை பண்பாடுகளை உள்ளடக்கி மண்ணும் மக்களும் என்ற தலைப்பில் உருவாகும்

**மக்களின் கலை பண்பாடு**

## நல்லூர்க் கந்தனின் தேர்த் திருவிழா

* தமிழீழ பொருண்மியக் கட்டுமானங்களை மாதந்தோறும் ஒவ்வொரு பகுதிகளாகப் பகுத்து "பொருண்மிய மேம்பாடு" என்ற தலைப்பில் பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவினர் வழங்கும் தொகுப்பு

## நல்லூர்க் கண்காட்சி

* தமிழீழத்தில் நடைபெறும் உண்மைச் சம்பவங்களை உயிரோட்டமான குறும்படங்களில் ஒன்றாக

**நிதர்சன மகளிர் பிரிவினர் உருவாக்கிய குறும்படம்**

## விடியலைத் தேடி

* தமிழீழத்தில் இன்று உருவாகி வரும் திரைப்பட இயக்குநர்களுடனான நேர்காணல்
* பிஞ்சுமனம் தயாரித்து வழங்கிய கேசவராஜனுடனான நேர்காணல்
* இவற்றுடன் காட்சியும் கானமும், மாவீரர் நினைவு போன்ற அம்சங்களுடன் இன்னும் பல விடயங்களை உள்ளடக்கி வெளிவந்துவிட்டது.

# ஒளிவீச்சு - ஓகஸ்ற் 95

**காணத்தவறாதீர்கள்**

* உங்களுக்கான பிரதிகளைப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

## திரைப்பட வெளியீட்டுப்பிரிவு

* 1995 ஓகஸ்ற் மாத ஒளிவீச்சு வீடியோ, சஞ்சிகை இன்று 01-10-95 **யாழ். ஸ்ரீதர் திரையரங்கில் மாலை 6-00 மணிக்கு இலவசமாகக் காண்பிக்கப்படும்.**

(ச-2385)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உலகம் கேட்குமா?

உலக நாடுகள் இப்போது சந்திரிகாவின் காதைத் திருகி, பல கேள்விகளைக் கேட்க வேண்டும்.

போரை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டு வரப் போவதாக அல்லவா பதவிக்கு வந்தீர்கள்?

சமாதானத்தை அடைவதற்காக எடுத்த முயற்சியை— விடுதலைப் புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சு வார்த்தையை — அவர்கள் முறித்து விட்டதால்தான் போரை மீண்டும் புதுப்பிக்க வேண்டியதாயிற்று என்றல்லவா எங்களுக்குச் சொன்னீர்கள்?

அரசாங்கம் நடத்தும் போர் தமிழ் மக்களுக்கு எதிரான தல்ல. விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காகவே வடக்கு - கிழக்கில் போர் நடத்தப்படுகிறது. அவர்கள் ஒரு சிறு குழுவினர். அவர்களை வென்று விரைவில் அரசியல் தீர்வைக் கொண்டு வந்து விட முடியும் என்று கூறினீர்களே?

போரை முடிவுக்குகொண்டு வந்து விட்டால் நாட்டில் பெரும் அபிவிருத்தியை உண்டாக்கலாம். அதற்கு உங்கள் உதவி தேவை என்று எங்களிடம் பணம் கேட்டீர்களே?

நாட்டின் வருமானத்தில் இருபத்தைந்து சதவீதமாக உள்ள இராணுவச் செலவை முப்பத்தி மூன்று சதவீதமாக உயர்த்தப் போவதாக இப்போது அறிவித்திருக்கிறீர்களே—

அவ்வாறாயின் உங்கள் நோக்கம் எல்லாம் மாறிவிட்டனவா? நீங்கள் எண்ணியது போல, நினைத்த மாதிரி எதனையுமே செய்ய முடியவில்லையா? விடுதலைப் புலிகளை வெல்ல முடியவில்லையா?

நாட்டில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு என்று உங்கள் நாட்டு மக்கள் உங்களுக்கு அளிப்போட்ட வாக்குகளை மறந்து விட்டீர்களா? சமாதானத்தை அடைவது என்ற இலக்கை அழித்து விட்டு, போரை நீடிப்பதென முடிவு செய்துவிட்டீர்களா?

இவ்வாறு அந்தக் கேள்விகள் அமைய வேண்டும். வெளிநாடுகள் அவ்வாறு கேட்கும் பட்சத்தில் சந்திரிகா பல பொய்களைக் கூறி சமாளித்து விடக்கூடும்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசினர் பாதுகாப்புச் செலவுக்கு அதிக பணம் செலவிட்டு நாட்டைச் சீரழிப்பதாக கூக்குரல் போட்டவர் சந்திரிகா. இப்போது நாட்டின் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை போருக்கென அவரே ஒதுக்கப் போகிறார்!

இதன் அர்த்தம் என்ன? சமாதானத்தை மட்டுமன்றி நாட்டின் அபிவிருத்தியையும் அவர் தூரத் தள்ளிவிட்டார்!

போரை நடத்தி தமிழர்களை இனப்படுகொலை செய்து, அவர்களின் எண்ணிக்கையை குறைத்து— பலவீனப் படுத்தி— அவர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட வேண்டும். அவர்களை விட்டு வைக்கக் கூடாது என்ற மன வன்மம் உண்டாகியிருக்கிறது. போரையே இந்நாட்டு மக்களின் வாழ்க்கையாக்கி நாட்டைச் சீரழித்து மேலும் குட்டிச்சுவராக்கி விடுவது என்று சங்கற்பம் பூண்டுவிட்டார். கெடுகுடி சொற்கேளாது; ஆகையால் போரின் பக்க விளைவுகளை சிங்கள மக்கள் அனுபவித்துப்பார்க்கட்டும்!

# காங்கேசன் துறைமுக பாதுகாப்பு: ரத்வத்தை நேரில் பார்வையிட்டார்

கொழும்பு, ஒக். 1

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தலைமையில் முப்படைத் தளபதிகள் இராணுவ அதிகாரிகள் அடங்கிய உயர்மட்ட குழு காங்கேசன் துறை துறைமுகத்தை நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு அதன் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்தது.

அமைச்சர் ரத்வத்தையுடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி. சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகர, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க, 'கூட்டு நடவடிக்கைகள் தளபதி மேஜர் ஜெனரல் றொஹான் தலுவத்தை உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

கடற்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ள கடற்படைத்தளத்தின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

படைத் தளபதிகளுடன் பிரதி அமைச்சர் ரத்வத்தை நேற்று முன்தினம் வடக்கே விஜயம் செய்தார். அவரது இந்த விஜயத்தின் நோக்கம் பாதுகாப்பு நிலைமைகளை நேரில் அவதானிப்பதுடன் பலாலியில் குவிக்கப்பட்டுள்ள சுமார் 35 ஆயிரம் துருப்புகளுக்கு உற்சாகமூட்டுவதும் ஆகும் 'என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி திவக வலய உதைபந்தாட்ட சங்கத்தினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் யாழ் மாவட்ட பிரபல உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொள்ளும் காட்சி ஆட்டமும் இன்று ஞாயிறு பி. ப. 3 00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

காட்சி ஆட்டத்தில் இளவாலை யங்கென்றியன் அணியும் ஊரெழு றோயல் அணியும் கலந்து கொள்ளும்.

1ஆம் இடத்திற்கான போட்டியில்—

மட்டுவில் மோகனதாஸ் வி. க. அணியும், புங்குடுதீவு அம்பாள் வி. க. அணியும் கலந்து கொள்ளும். [ஒ-17]

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயது பிரிவின் கால் இறுதிப் போட்டிகள் இன்று ஞாயிறு காலை 9.00 மணி தொடக்கம் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

★ காலை 9.30 — சாவகச்சேரி இந்து எதிர் நாவற்குழி ம. வி.

★ காலை 10.30 — மீசாலை வீரசிங்கம் ம வி. எதிர் மட்டுவில் கமலாசனி வித்.

★ பி. ப. 3 00 — வரணி ம. வி. எதிர் சாவகச்சேரி டிறிபேக்.

★ மாலை 4 00 மணி — கச்சாய் அ. த. க. பா. எதிர் மட்டுவில் சந்திரபுர விகந்த வரோதயா ம. வி.

[ஒ-117]

★ ★ ★

கரப்பந்தாட்ட விளையாட்டின் நூறாவது ஆண்டு நிறைவையும் "உதயன்" வெளியீட்டகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையும் ஒட்டி யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 00 மணி:- நவோதயா வி.க. எதிர் ஆவரங்கால் மத்தி வி.க.

★ 5.00 மணி:- இடைக்காடு இளைஞர் வி க. எதிர் காங்கேசன்துறை ஐ. வி. க.

## பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல் இன்றும் நாளை திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமையும் உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தினமும் முற்பகல் 9 மணி முதல் மாலை 5 மணி வரை கலந்துரையாடல் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் உடுவில் வட்டத்தைச் சேர்ந்த ஏழாலை வடக்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை மத்தி, ஏழாலை மேற்கு, ஏழாலை தென்மேற்கு, ஏழாலை கிழக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு, சுன்னாகம் வடக்கு சுன்னாகம் மத்தி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம் கிழக்கு, கந்தரோடை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களும் கலந்து கொள்ளுமாறு உடுவில் வட்டம் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## மாணவர்கள் கவனத்துக்கு

சுன்னாகத்தில் இயங்கிவந்த சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை நாளை திங்கட்கிழமை தொடக்கம் கோண்டாவிலில் அமைந்துள்ள வடமாகாண போக்குவரத்துச் சபைக் கட்டடத்தில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம் தற்போது உரும்பராய் இந்துக் கல்லூரியில் இயங்குவதாக பாடசாலை அதிபர் அறிவிக்கின்றார். (எ)

★ ★ ★

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை தொடர்ந்தும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்குவதாகவும்—

முதுநிலை பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் எதிர்வரும் புதன் கிழமைக்கு முன் பாடசாலைக்கு சமுகமளித்து விண்ணப்பத்தில் கையொப்பமிடுமாறும்— அதிபர் அறிவிக்கின்றார். (எ)

★ ★ ★

அச்சுவேலி, ஒக். 1

அச்சுவேலி மகா வித்தியாலயம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் செயற்படும்.

## விஜயதசமியும் வித்தியாரம்பமும்

தர்மம் அதர்மத்தை வெற்றி கொண்ட தினமாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. "விஜய" என்பது வெற்றி என்ற பொருள்படும்.

ஆயுதத்தின் மூலம் வெற்றியடைந்த தினமாக புரட்டாதி மாதத்து வளர்பிறைத் தசமியை அரசர்கள் ஆயுதப் பயிற்சிக்கு உகந்ததாகக் கொண்டிருக்க வேண்டும். அக்காலத்தில் குருகுலவாசக் கல்வியே நடைமுறையிலிருந்ததால், போர்ப்பயிற்சி மாத்திரமன்றி, ஒரு குருவுக்குத் தெரிந்த மற்றைய கலைகளும் இத் திதியில் பயிற்றப்பட்டிருக்கக் கூடும். விஜயதசமிக்கு முதல் தினமான மஹா நவமியில் ஆயுத பூசை மேற்கொள்ளப்படுவது இங்கு நோக்கற்பாலது. இப்பொழுது இசைக் கருவிகளும், நூல்களும் பூசைக்கு வைக்கப் படுகின்றன. இசை வேளாளர்கள் நாதஸ்வரம், தவில் ஆகியவற்றை "ஆயுதம்" எனக் குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கற்பாலது.

ஒரு ஆண்டிலுள்ள 365 நாட்களுள் ஒருசில நாள்களையே வித்தியாரம்பம் அட்சராரம்பம் ஆகியவற்றுக்கு உகந்தனவாகப் பஞ்சாங்கங்கள் குறிப்பிடுவதன் காரணத்தையும் ஆராய்தல் நன்று.

உத்தராயண மாதங்கள் (தை தொடக்கம் ஆனி வரை) செவ்வாய், சனி தவிர்ந்த வாரங்கள். ஒரு சில திதிகள், ஒரு சில நட்சத்திரங்கள். உபய இராசிகளாக வரும் இலக்கினங்கள், சரஸ்வதி யோகம், வித்தியாயோகம் போன்ற கிரக அமைப்புக்கள், காலை அல்லது மத்தியானம் வரையிலான நேரங்கள், பஞ்சக தோஷம் அற்ற நேரங்கள் ஆகியவற்றுட் பெரும் பாலானவை சேர்ந்து வரும் முகூர்த்தங்களே சுப காரியமான கல்விக்கு உகந்தவையாகக் கொள்ளப்படுவதாலேயே மிகச் சில நாள்கள் மட்டுமே பஞ்சாங்கத்திற் குறிப்பிடப்படுகின்றன.

இந்துக்களின் பிறப்பிலிருந்து இறப்புவரை எல்லாவற்றுக்கும் உபயோகிக்கப்படும் சோதிட சாஸ்திரத்தைச் சரியான முறையிற் கைக் கொள்வதே நன்று.

"விதானமாலை", "சரசோதி மாலை", செகராசசேகரமாலை" என்னும் சோதிட நூல்கள் வித்தியாரம்பம், அட்சராரம்பம் ஆகியவற்றுக்குரிய விதிகளை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றன. விஜயதசமி பற்றி இவை குறிப்பிடவில்லை.

சோதிட சாஸ்திர விற்பன்னராக இன்று விளங்கு பேராசிரியர் பெங்களூர் வேங்கடராமன் அவர்களின் "Muhurtha" என்னும் ஆங்கில நூல் இது பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளது. விஜயதசமி பற்றி இந்நூலும் குறிப்பிடவில்லை.

எல்லாச் சுப காரியங்களுக்கும் விஜயதசமி உகந்ததாகவும் அது ஒரு "சர்வதோஷ நிவாரணி"யாகவும் கொள்ளப்படுவதாகக் கூறும் பொழுது அறிஞர்கள் ஆதாரங்களுடன் கூறுவதே முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைப் புலவர், ஜோதிடர்
நா. சச்சிதானந்தன்

## கம்பன்கழக நாடக அரங்கு ஒத்திவைப்பு

நவராத்திரி காலத்தை யொட்டி அகில இலங்கைக் கம்பன்கழகம் நடத்தி வரும் இயல், இசை, நாடக விழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த நாடக அரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது

## யாழ். பேரணி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை பேரணியின் முடிவில் வெகுஜன அமைப்புக்கள் மற்றும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட — மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் ஆகியவை பற்றிய தகவல்கள், கொழும்பு ஊடாக ஜெனிவா மற்றும் முக்கிய நகரங்களில் அமைந்துள்ள சர்வதேச அமைப்புக்களின் தலைமையகங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் தெரியவந்தது.

ஸ்ரீலங்காப் படைகள் அப்பாவி மாணவர்களையும் மக்களையும் தாக்கிக் கொன்றமை தொடர்பான உறுதிப் படுத்தப்பட்ட செய்திகளும் இதனையிட்டு தமிழ் மக்கள் அடைந்துள்ள துயரம் சர்வதேச ரீதியாக அவதானிப்புக்குள்ளாகியுள்ளது.

## நாட்டின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டம் 670 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்படவிருப்பதாகவும்—

இந்த அதிகரிப்பைச் சமாளிக்க மேலதிக வருமானத்தை பெறுவதற்கான புதிய யோசனைகள் எதிர்வரும் நவம்பரில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — இலங்கையின் வருமானத்தில் சுமார் கால்பங்கு யுத்தத்துக்கும், புனரமைப்புக்கும் செலவிடப் படுவதாக சுட்டிக்காட்டப் பட்டது. [ஒ-3 6]

## பத்துவயதுச்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிந்த வைத்தது.

தனது தாய் ஷெல் வீச்சினால் இறந்து விட்டார்.

சகோதரியின் அழுகையை நிறுத்த அவர் வரமாட்டார் என்று தெரிந்தும் அந்தச் சிறுமியின் சமயோசிதம் ஒரு கணம் திகைக்க வைத்தது

கடந்த செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறைப் பகுதி மீது பலாலியில் இருந்து நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் வீச்சில் சுசிலாவின் தாயார் வள்ளி நாயகி இறந்து விட்டார். தகப்பனாரும் காயமுற்றார்.

காயமுற்றபோதிலும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த தந்தையார் மனைவியின் இறுதிக் கிரியைகளுக்காக வீடு சென்றுவிட்டார்.

காயமுற்ற இரண்டு வயதுச் சகோதரி சசிகலாவைப் பராமரிக்கும் பொறுப்பு சுசிலாவினுடையதாயிற்று!

தாயை இழந்த கவலையை மனதில் அடக்கிக் கொண்டு சகோதரிக்கு தேறுதல் வார்த்தை கூறிக்கொண்டிருந்த சுசிலாவைக் கண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தோர் கண் கலங்கினர்.

"ஷெல் அடிக்கிறான்கள் பங்கருக்குப் போவோம் வாருங்கள் என்று அம்மா எல்லோரையும் கூப்பிட்டா. நாங்கள் பங்கரை நோக்கி ஓடிய போது ஷெல் வந்து விழுந்தது. அம்மா வயிறு பிளந்து துடிதுடித்து இறந்தார். அப்பா காயமுற்றார். தங்கச்சிக்கும் காயம் ஏற்பட்டது. நான் தப்பிக் கொண்டேன்" என்று அன்றைய கொடும் சம்பவத்தை எமது செய்தியாளரிடம் விவரித்தார் அந்தப் பத்து வயதுச் சிறுமி சுசிலா.

அரச படைகள் குடாநாட்டில் நடத்தும் தாக்குதல்கள் இது போன்று இப்படி எத்தனை குடும்பங்களை பரிதாப நிலைக்குத் தள்ளுகின்றன!...

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா இராசமணி

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நாகோடகந்தானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இராசமணி 25-09-95 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும், இராசநாதன், கதிர்காமநாதன், சரோஜா, மனோகரன் (மானிப்பாய்), சசிகரன், காலஞ்சென்ற இராஜேந்திரன், பாலச்சந்திரன், வசந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசிங்கம் (காரைநகர்), சுந்தரம்மா (தச்சன் குளம் வவுனியா), இராசதுரை (ஒட்டி சுட்டான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மல்லிகாதேவியின் (மானிப்பாய்), அன்பு மாமியாரும், மோகனப் பிரகாஸ், சிவாஜினி, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-09-95 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
ந. மனோகரன் (மகன்)

"மல்லிகாபதி"
மானிப்பாய். (38774)

## கந்தையா சறோயாதேவி

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா இராசமலரின் நான்காவது மகளான கந்தையா சறோயாதேவி அகால மரணமடைந்துள்ளார்.

இவர் தெய்வேந்திரம், புஷ்பராணி, தேவமணி, தவறஞ்சனா, சந்திரவதனா, இராசேந்திரம், திருவருள், பிரியா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இவரின் மரணச் சடங்கு 1-10-95 ஞாயிறு காலை 10 மணிக்கு இலக்கம் 550/6, கே. கே. எஸ். வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. கந்தையா
[தகப்பன்]

550/6, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [38783]

## வீரகத்தி சண்முகலிங்கம்

[முன்னாள் யாழ். மாநகரசபை எழுதுவினைஞரும், தற்போது செட்டிகுளம் பிரதேசசபை பிரதம எழுதுவினைஞரும்]

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வவுனியா இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சண்முகலிங்கம் வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ஈஸ்வரியின் [நாவற்குழி] அன்புக் கணவரும், சஞ்சீவனின் அன்புத் தகப்பனும், மகேஸ்வரி [ஆசிரியை, சரவணை சின்னமடு றோ. க. பாடசாலை], நாகமுத்து [ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்], ராசேஸ்வரி, அருளானந்தசிவம் (இந்தியா), குமரகுருபரன் (ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சரவணபவான் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்), சிவபாக்கியம், சண்முகரத்தினம், ஜெயமணி, ஜெம்மா, சிவானந்தராசா, இலட்சுமணன், சிவநாதன், சிவலிங்கம் (நல்லூர் பிரதேசசபை) சிவபாலன், சிவஞானசேகரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
வி. நாகமுத்து
[சகோதரர்]

இல. 04,
அருளம்பலம் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம். (38787)

## திருமதி அன்னம்மா மரியாம்பிள்ளை

யாழ். புனித ஆசிர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த அன்னம்மா 30-9-95 இல் காலமானார்.

இவர் மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், யேசுதாசன், குசைதாசன், தவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், எலிசபெத், லில்லி, இராஜசுந்தரம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான மரியம்மா, திரேசம்மா, அந்தோனிப்பிள்ளை, மாகிறெட், மற்றும் லோறன்ஸ், நீற்றா அருட்சகோதரி வில்பிறட் (தி. கு. க. மடம்) ஆகியோரின் சகோதரியும், அருட்திரு றெனால்ட்டின் (அ. ம. தி.) மாமியாரும், ஜஸ்மின் (ஆசிரியை, தி. கு. க. மடம்), றொமின், நிமாலின், சிறோமின், மரீன் தர்சினி, மரீந்திரன், ஜோஜி, வினோதினி, சுதாசினி, லெபோண் திவ்யன், காலஞ்சென்ற றாஜினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (1-10-95) பி. ப. 3 மணிக்கு புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலியின் பின், புனித சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜசுந்தரம்
(மருமகன்)

40, ஆசிர்வாதப்பர் வீதி,
நல்லூர். [38788]

## 3 ஆம் கட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கள் திருமலை துறைமுகத்துக்குள் உள்ளே வைத்தும் — துறைமுகத்துக்கு வெளியே வைத்து ஒரு ரோந்துப் படகும் கடற்புலிகளால் தாக்கப்பட்டன.

திருமலை குடாவிற்கு வெளியே ஒரு "டோறா" படகு மூழ்கடிக்கப்பட்டது.

சுப்பர் டோறா படகு உட்பட இரு டோறா படகுகள் முல்லைதீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்புலிகளால் தாக்கப்பட்டன.

அத்துடன் இக்காலப் பகுதியில் காங்கேசன்துறை துறைமுகத்தினுள் வைத்து "எடித்தரா" கட்டளைக் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது. துறைமுகத்துக்கு வெளியே வைத்து மற்றொரு 'டோறா' படகு மூழ்கடிக்கப்பட்டது.

படையினருக்கான சரக்கு விநியோகக் கப்பல் ஒன்றும், தரையிறக்கும் கப்பல் ஒன்றும் தாக்கப்பட்டன. அதில் விநியோகக் கப்பல் சேதமடைந்தது.

மண்டைதீவு தளம் உட்பட 10 இராணுவ முகாம்களும், ஒரு பொலீஸ் இராணுவ கூட்டு முகாமும், 3 பொலீஸ் நிலையங்களும் இக்காலப் பகுதியில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் நளின் அங்கமன, கேணல் காமினி பெர்னாண்டோ, லெப்டினன்ட் கேணல் திஸநாயக்கா ஆகிய உயர் தளபதிகள் மூவர் பலியாகியுள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலி இத்தகவல்களை வெளியிட்டது. (ஐ-4)

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் அம்பலவாணர்

(முன்னாள் சுருக்கெழுத்தாளர், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை)

போயிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தெல்லிப்பழையிலும் பின்னர் தற்போது ஆஸ்பத்திரி வீதி மானிப்பாயில் வசித்தவருமாகிய மயில்வாகனம் அம்பலவாணர் நேற்றுச் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் - தையற்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகனும், காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற கந்தப்பிள்ளை மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் நாகநாதர், காலஞ்சென்ற இலையதம்பி மற்றும் சரஸ்வதி, திருச்சிற்றம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னபூரணம், இராசம்மா, சிவசுப்பிரமணியம், ஆறுமுகநாதன், பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும், சிவபாலன், காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் சிவகந்தராசா (சவுதி), அருந்ததேவி (இலண்டன்), திருவருட்செல்வி (இலங்கை வங்கி, காங்கேசன்துறை), சத்தியசீலன் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், கலாதேவி, சிவதேவன் (இலண்டன்), ஜெகநாதன் (இலங்கை வங்கி, வெள்ளவத்தை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாம்பவி, சங்கரி, சிரேன், வினோதினி, சித்துஜன், பவித்திரா, கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01-10-95) ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு பிப்பிலி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
அ. சிவபாலன்
(மகன்)

ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

# இதயம் நெகிழ்ந்த நன்றிகள்

20-09-1995 அன்று நடைபெற்ற எங்கள் வங்கியின் முகாமையாளர்

## அமரர் செ. வைத்தியநாதன்

அவர்களின்

மரண நிகழ்வில் கலந்து கொண்ட வாடிக்கையாளர்கள், வங்கியாளர்கள், நண்பர்கள், இரங்கல் உரை நிகழ்த்திய அன்பர்கள், மலர் வளையம் சாத்தி, மலர் மாலைகள் அணிவித்து, அனுதாப செய்திகள் அனுப்பியவர்கள், வெளியிட்டவர்கள், பல வழிகளிலும் எங்களிற்கு உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எங்கள் சிரம் தாழ்த்திய நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னார் சுகவீனமுற்றிருந்த வேளை தங்கள் சேவைகளை அர்ப்பணித்த, யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிகள், சிற்றூழியர்கள் மற்றும் பூதவுடலை கொழும்பிற்கு அனுப்ப உதவிய குமரன் பயணிகள் சேவை நிறுவனத்தினருக்கும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளையினருக்கும், செய்திகளை பரிமாறுவதற்கு உதவிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்க, டெயர் நிறுவன பணியாளர்களுக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகுக.

எங்கள் பாதுகாப்புச்சேவை உத்தியோகத்தர்கள், "வைற் ஹவுஸ்" அந்தியகால சேவையினரையும், மேலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிகள் புரிந்த ஏனையோரையும் நினைவு கூர்ந்து நன்றிகள் கூறும்.

— யாழ். கொமர்ஷல்வங்கி நிறுவனத்தினர்.

474, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [38770]


# சுவையருவி

வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
நலன் விரும்பிகளின் வேண்டுகோளுக்கிணங்க

மீண்டும் காலை உணவு:-

இடியப்பம், தோசை, மசாலாதோசை

மதிய உணவு:-

சைவ, அசைவ உணவு வகைகள்,
கோழிபுரியாணி, சீனவகை உணவு
தயாரிப்புகள்

ஆகிய யாவற்றையும் பரிமாறும் சேவையுடன் வழங்கவுள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

பாண், பணிஸ், பிஸ்கட் வகைகள், பார்மா வகைகள், கேக் தயாரிப்பு பொருள்கள் மற்றும் உங்கள் அன்றாட தேவைப் பொருள்கள் யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

சுவையருவியின்
பல்பொருள் விற்பனைப்பகுதியை
நாடுங்கள்

சுவையான, தரமான, சுத்தமான குளிர்களி,
குளிர்பானவகைகள், மற்றும் சிற்றுண்டி
வகைகள் ஆகியவற்றிற்கும்

★ ஓடர்கள் உடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

சுவையருவி
லெப். கேணல் இராஜன் வீதி,
யாழ்ப்பாணம்
(38784)


# அறிவித்தல்

## மாதாந்தக் கருத்தரங்கு ஒத்திவைப்பு

சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்குமான எதிர்வரும் 95-10-03 ஆம் திகதி நடைபெறவிருந்த மாதாந்தக் கருத்தரங்கு ஒத்தி வைக்கப்பட்டு, எதிர்வரும் 1995-10-04 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

எனவே சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள் பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்
வடமாகாண ப. தெ. வ. கூ. சமாசம்

(சி-8384)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01-10-95 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org